**மரக்கறி அபிவிருத்திச் சபை**

**1. நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

2002 முதல் 2010 ஆம் ஆண்டு வரையான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை

**2. கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**2.1 செயற்பாடுகள்**

2001 ஆம் ஆண்டின் பின்னர் சபையின் நடவடிக்கைகள் செயற்பாடற்று இருந்ததுடன், அதற்குரிய பதவியணியினரும் கட்டுப்பாட்டு சபையும் காணப்படவில்லை. மேலும் சபையின் நடவடிக்கைகளை செயற்படுத்துவதற்கோ அல்லது கலைப்பதற்கோ அமைச்சு நடவடிக்கை எடுத்தது பற்றி சான்றுகள் காணப்படவில்லை. அத்துடன் சபையை தாபித்தலுக்குரிய கட்டளைச் சட்டங்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

**2.2 கணக்குகள், ஏடுகள் மற்றும் பதிவேடுகளைப் பராமரித்தல்**

மீளாய்வாண்டிற்குரிய கணக்குகள் ஏடுகள் மற்றும் பதிவேடுகளைப் பராமரித்தல் தொடர்பாக எவ்வித சான்றுகளும் கணக்காய்விற்குச் சமரப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் உள்ளமை

அதிகாரசபையினால் இறுதியாகத் தயாரிக்கப்பட்ட 2001 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகையில் காட்டப்பட்டுள்ள கீழேயுள்ள சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக எவ்வித சான்றுகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் அவற்றின் உள்ளமை மற்றும் சரியான தன்மை தொடர்பாக மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது.

| சொத்துக்கள் | ரூபா | பொறுப்புக்கள் | ரூபா |
|---|---|---|---|
| அலுவலக உபகரணங்கள் | 253,136 | செலுத்த வேண்டிய வங்கி வட்டிக்கான வரி | 72,454 |
| நிலையான வைப்புக்கள் | 5,480,400 | செலுத்தப்பட வேண்டிய கணக்காய்வுக் கட்டணம் | 37,125 |
| கிடைக்க வேண்டிய நிலையான வைப்புகளுக்கான வட்டி | 724,542 | அட்டுறு செலவினம் | 5,548 |
| வங்கி மீதி | 971,888 | | |

## 2.4 நிதிய முதலீடு

அரசாங்க வங்கியொன்றில் நிலையான வைப்புக் கணக்கொன்றில் ரூபா. 4,200,000 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதன் வருடாந்த வட்டி நடைமுறைக்கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டு வந்தது, மீளாய்வாண்டின் இறுதியில் அந்த நடைமுறைக் கணக்கில் காணப்பட்ட ரூபா 6,854,184 மீதியை வினைத்திறனான முதலீடொன்றில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.